RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் அக்டோபர் 23 * 2025 * மலர் -1 * இதழ்-143 * VOL-1 * ISSUE-143 விலை ரூ.3 * பக்கம் -4




சென்னைமாநகராட்சி அலுவலககட்டளைமற்றும்கட்டுப்பாட்டுமையத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திடீராய்வு மேற்கொண்டு, 1913 என்ற உதவி எண்ணிற்கு தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் புகார் குறித்த விவரங்களை தானே கேட்டறிந்தார்.

## 7-வது முறையாக மேட்டூர் அணை நிரம்பியது



மேட்டூர் அணை நடப்பாண்டில் 7–வது முறையாக நிரம்பியது. எனவே அணைக்கு வரும் 35ஆயிரம்கனஅடிநீர்அப்படியேகாவிரியில்வெளியேற்றப்படுகிறது. ஆற்றில்ஆர்ப்பரித்து செல்லும் தண்ணீரை படத்தில் காணலாம்.

## புல்லா வெளி நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரிப்பு




மேற்கு தொடர்ச்சி மலை தாண்டிக்குடி பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக புல்லா வெளி நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

### காற்றழுத்தம் மேலும் தீவிரம்:

# வட தமிழகம் - தென் ஆந்திரம் வழியாக புயல் சின்னம் இன்று கரையைக் கடக்கும்!

★தொடர் மழையால் ஏராளமான நீர்நிலைகள் நிரம்பின;
★டெல்டா பகுதியில் 50,000 ஏக்கரில் பயிர்கள் மூழ்கின!!



சென்னை, அக். 23

வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்த 12 மணி நேரத்தில் மேலும் வலுவடைகிறது. இது நாளை வட தமிழகம்–தென் ஆந்திரம் வழியாக கரையைக் கடக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வட மாவட்டங்களில் நாளை மிக கன மழை பெய்யும். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக ஏராளமான நீர்நிலைகள் நிரம்பி விட்டன. டெல்டா மாவட்டங்களில் சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் மூழ்கிவிட்டன.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை அக்டோபர் 16–ஆம் தேதி தொடங்கியது. அதாவது வழக்கத்தைவிட 5 நாட்களுக்கு முன்னரே தொடங்கி விட்டது. இந்தப் பருவ மழை டிசம்பர் மத்தி வரை நீடிக்கும். இந்த காலகட்டத்தில் சராசரியாக 41 செ.மீ. மழை பதிவாகும். இதில் தென் மாவட்டங்களை விட வட மாவட்டங்கள் அதிகமழையைப்பெறும்.

இந்த ஆண்டு பருவ மழை தொடங்கிய பின்னர் அரபிக் கடலில் புயல் சின்னம் உருவானது. இதனால் தமிழ்நாட்டுக்கு நன்மை இல்லை. இந்த நிலையில் வங்கக் கடலில் நேற்று குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.

இது படிப்படியாக வலுவடைந்து வருகின்றது. மேற்கு–வட மேற்கு திசையில் நகரத் தொடங்கியது. இதன் விளைவாக தமிழ்நாட்டில் தொடர் மழை பெய்து வருகிறது.

இந்தப் புயல் சின்னம் தோன்றுவதற்கு முன்னரே காற்றின் மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சியின் காரணமாக தென் மாவட்டங்களிலும், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளிலும் கன மழை பெய்தது. குறைந்த காற்றழுத்தம் தோன்றிய பிறகு தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. குறிப்பாக கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிக பலத்த மழையும் பெய்தது. அந்த வகையில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும், விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு , சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட வட மாவட்டங்களிலும் அடுத்தடுத்து பரவலாக மழை பெய்து வருகிறது.

இதனால் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. ஏற்கனவே தென் மேற்கு பருவக் காற்று காலத்தில் அணைகளும், ஏரிகளும் நிரம்பி காணப்பட்டன. இப்போது கூடுதல் வரத்து ஏற்பட்டு உபரி நீர் திறக்கப்பட்டு வருகின்றன. இதனால் கால்வாய்களிலும், ஓடைகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளன. டெல்டா மாவட்டங்களில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் மூழ்கி உள்ளன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது ஒரு புறம் இருக்க, வங்கக் கடலில் தோன்றிய குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வருகின்றது. இது அடுத்த 12 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக மாறும் என்றும், அதன் பிறகு வட மேற்கு திசையில் நகர்ந்து நாளை வட தமிழகம்–தென் ஆந்திரம் இடையே கரையைக் கடக்கும் என்று அகில இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வட தமிழகம் மற்றும் தென் ஆந்திரம் ஆகிய பகுதிகளில் மிகமிக பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மழை அக்டோபர் 24–ஆம் தேததி வரை நீடிக்கும்.

### ஆந்திராவில் கொடூர சம்பவம்:

## மனைவியின் நெற்றியில் குத்திய கத்தி, வாய் வழியே வந்தது!

### போதையில் கணவன் வெறிச்செயல்!!

காக்கிநாடா, அக்.23

ஆந்திராவில் குடும்பத் தகராறில் போதையில் கணவன் – மனைவியின் நெற்றியில் குத்திய கத்தி வாய் வழியே வந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் கோனசீமா மாவட்டம், பி. கன்னவரம் மண்டலத்தில் உள்ள உதிமுடி கிராமத்தைச் சேர்ந்தவர் நெலபுடி கங்கராஜு (39). இவரது மனைவி பல்லலம்மா (36) இருபது ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். கங்கராஜு மதுவுக்கு அடிமையானவர். குடித்துவிட்டு வந்து அடிக்கடி பல்லம்மாவை அடித்து துன்புறுத்தி வந்தார். இந்த சூழலில் தீபாவளி பண்டிகையின் போது பட்டாசு வாங்குவது தொடர்பாக இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

சம்பவத்தன்று இரவு 11 மணியளவில் அதிகமாக குடித்துவிட்டு வீட்டிற்கு வந்த கங்கராஜு, மனைவியுடன் மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். வாக்குவாதம் அதிகரித்ததால், கோபமடைந்து தன்னிடம் இருந்த கத்தியால் அவரது தொண்டையில் குத்த முயன்றார். தப்பிக்க முயன்ற பல்லம்மாவின் தலையை குத்தியபோது, கத்தி அவரின் இடது கண்ணுக்கு மேலே இருந்து நேராக அவள் வாயில் சென்றது. இந்தக் கொடூரத்தை க் கண்ட குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் உடனடியாக அவரை அமலாபுரத்தில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இருப்பினும், தீபாவளி விடுமுறை என்பதால், அங்கு மருத்துவர்கள் இல்லை. இதனால், பாதிக்கப்பட்ட பெண் காக்கிநாடா அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இரவு முதல் அதிகாலை 6 மணி வரை விடிய விடிய அங்குள்ள மருத்துவர்கள் மிகவும் சிக்கலான அறுவை சிகிச்சை செய்து கத்தியை வெற்றிகரமாக அகற்றினர். தற்போது அவரது உடல்நிலை தற்போது சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப் பதிவு செய்து கங்கராஜுவை கைது செய்தனர்.





வடகிழக்கு பருவமழை வெள்ளத்தால் பாதிப்படைந்த ஈரோடு மாவட்டம், கொங்கர்பாளையம் ஊராட்சி, தரைமட்டப்பாலத்தினை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் கலெக்டர் கந்தசாமி, எம்.எல்.ஏ.க்கள் ஏ.ஜி. வெங்கடாச்சலம், வி.சி.சந்திரகுமார், கோபி சார் ஆட்சியர் சிவானந்தம் உள்பட பலர் உள்ளனர்.

### சென்னை நீலாங்கரையில் பயங்கரம்:

## மனைவி, 2 மகன்களை கொன்று தொழிலதிபர் தற்கொலை!

### கடன் தொல்லையால் விபரீத முடிவு!!

சென்னை,அக்.23–

சென்னை நீலாங்கரையில் கடன் தொல்லையால் மனைவி, 2 மகன்களை கொன்று தொழிலதிபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

சென்னை கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம், சாகஸ் வைபவ் அபார்ட்மெண்டில் வசித்து வந்தவர் தொழிலதிபர் சஞ்சீவி தாமோதர குப்தா (56). இவர் மவுண்ட் ரோட்டில் எலக்ட்ரானிக் கடை ஒன்றை நடத்தி வந்தார். இவருக்கு ரேவதி (46) என்ற மனைவியும், ரித்விக் ஹர்சத் (15), தித்விக் ஹர்சத்(11) என்ற இரண்டு மகன்களும் இருந்தனர்.

சஞ்சீவி தாமோதர குப்தா, தான் நடத்தி வந்த தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக பலரிடம் கடன் வாங்கியதாக கூறப்படுகிறது. கடன் கொடுத்தவர்கள் பணத்தை திருப்பி கேட்டு நெருக்கடி கொடுத்ததால், மன உளைச்சலில் இருந்துள்ளார். இந்நிலையில், நேற்று இரவு சஞ்சீவி தாமோதர குப்தா தனது மனைவி ரேவதி மற்றும் மகன்கள் ரித்விக் ஹர்சத், தித்விக் ஹர்சத் ஆகியோரை கொ லை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார். இன்று காலை வெகுநேரமாகியும் இவர்களது வீடு திறக்கப்படாததால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர், நீலாங்கரை காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல்துறையினர், வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, நான்கு பேரும் இறந்து கிடந்தனர். தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டன. பின்னர், உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து நீலாங்கரை காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கடன் தொல்லையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### கடத்தூர் போலீஸ் நிலையம் முன் பரபரப்பு:

## கழுத்து, மார்பில் கத்தியால் குத்தி வாலிபர் தற்கொலை முயற்சி!

### மனைவியிடமிருந்து குழந்தையை மீட்டுத் தரக்கோரி ரகளை!!



தர்மபுரி,அக்.23–

தர்மபுரி மாவட்டம் கடத்தூர் அருகே உள்ள தா.அய்யம்பட்டியை சேர்ந்த வர்மாணிக்கம் (27). இவரது மனைவி பிரியா (23) இவர்களுக்கு 6 மாத ஆண் குழந்தை உள்ளது. மாணிக்கம் தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தகராறில் ஈடுபட்டதால் தம்பதி க்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. இதனால் பிரியா கோபித்துக் கொண்டு குழந்தையுடன் தன் தாய் வீட்டுக்கு சென்று விட்டார்.நேற்று இரவு அங்கு குடிபோதையில் சென்ற மாணிக்கம் குழந்தையை தூக்கிக் கொண்டு தன் வீட்டிற்கு வந்துவிட்டார்.

இது குறித்து பிரியா கடத்தூர் போலீசில் புகார் அளித்தார். புகாரின் படி போலீசார் தா.அய்யம்பட்டி கிராமத்திற்கு சென்று குழந்தையை மீட்டு பிரியாவிடம் ஒப்படைத்தனர். விசாரணைக்காக கடத்தூர் காவல் நிலையம் வந்த மாணிக்கம் தன் குழந்தையை தன்னிடம் தருமாறு காவல் நிலையம் முன் குடி போதையில் சத்தம் போட்டார். ஆனால் இதை போலீசார் கண்டு கொள்ளவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த மாணிக்கம் சிறிய கத்தியால் தனது கை மார்பு கழுத்து ஆகிய பகுதிகளில் கத்தியால் அறுத்துக் கொண்டு கூச்சலிட்டார்.

மாணிக்கம் உடலில் இருந்து ரத்தம் கொட்டியது. இதை பார்த்த உறவினர்கள் அவரை மீட்டு கடத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.காவல் நிலையம் முன் நடந்த இச்சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### வாடகை வீட்டில் ஒன்றாக வசித்த காதலர்கள் தற்கொலை!

பெங்களூர், அக்.23

கர்நாடகா மாநிலம், பெங்களூரு அருகே ஆனேக்கல் தாலுகா ஜிகினியில் வசித்து வந்தவர் ராகேஷ் பாத்ரா (23) .இவர் அங்குள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அப்போது அவருடன் வேலை பார்த்த சீமா நாயக் (21) என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து இருவரும் திருமணம் செய்யாமல் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அந்த வீட்டில் கணவன் மனைவி போல் வாழ்ந்து வந்தனர். சமீப காலமாக இவர்களுக்கு இடையே அடிக்கடிசண்டைகள்ஏற்பட்டதாகக்கூறப்படுகிறது. கடந்த 19–ந் தேதி இரவு, ராகேஷ் மற்றும் சீமா இருவரும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டனர். காலையில் நீண்ட நேரமாக வீடு திறக்கப் படாத நிலையில் அக்கம் பக்கத்தினர் வந்து வீட்டை திறந்து பார்த்த போது இருவரும்தூக்கில்தொங்கியநிலையில்இருந்ததைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர் வைத்து விசாரித்து வருகிறார்கள்.



உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி வளாகத்தில் உள்ள பி.என் வல்லரசு நினைவு இடத்தில் வல்லரசு நினைவு தினத்தை முன்னிட்டு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பி வி கதிரவன் தலைமையில் மதுரை மாவட்டம் பொது செயலாளர் மணிகண்டன், மாநில செயலாளர்கள் பாஸ்கர பாண்டியன் , இராஜா மாவட்ட தலைவர் ஆதிசேடன் வழக்கறிஞர்கள் ரெட் காசி பி.பி. இளையரசு எல். எஸ் இளங்கோவன் ஆச்சி ராஜா மற்றும் கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை ஊராட்சியில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் மழைநீரை அகற்றும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. என்.ஓ.சுகபுத்ரா, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஆர். ஆர். சீனிவாசன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



மதுரை மாவட்டத்தில் பெய்த கனமழையின் காரணமாக வைகை கரையில் நீர்வரத்து குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மேற்கொண்டு பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உடன் உள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்டஆட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்றஉறுப்பினர்வசந்தம்க.கார்த்திகேயன்,சங்கராபுரம்சட்டமன்றஉறுப்பினர்தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளார்கள்.

# குமாரபாளையம் ஆஞ்சநேயர் கோயிலில் சிறப்பு வழிபாடு!

குமாரபாளையம், அக், 23

ஐப்பசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நாளையொட்டி குமாரபாளையம் அக்ரகாரம் பகுதியில்21 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சுவாமிக்குசிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மலர் மாலை, வடைமாலை, வெற்றிலை மாலை அணிவிக்கப்பட்டுசிறப்பு ஆராதனை நடைபெற்றது. இதில் குமாரபாளையம் மற்றும் பவானி பகுதிகளைச்சேர்ந்த பக்தர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்

செய்தி

குமாரபாளையத்தில்நாமக்கல் கவிஞர் பிறந்தநாள் விழா குமாரபாளையம், அக், 23

குமாரபாளையம் கிளை நூலக வாசகர் வட்டம், விடியல் ஆரம்பம் சார்பாக கிளை நூலகத்தில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து , சிறப்பாக கொண்டாடப்பட்டது. அமைப்பாளர்பிரகாஷ்தலைமை வகித்தார். கவிஞரை பற்றி சண்முகசுந்தரம், பஞ்சாலை சண்முகம், எழுத்தாளர் கேசவ மூர்த்தி, ராஜகோபாலன் ஆகியோர் பேசினார்கள். பள்ளி மாணவ ,மாணவியர்களுக்கு பேச்சு போட்டி மற்றும் கட்டுரை போட்டி, ஓவிய போட்டி, வைக்கப்பட்டு,அதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசாக புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. அகிம்சையை போதித்த நாமக்கல் கவிஞரின் வழி நடப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். ஆசிரியை ராணி நன்றியுரை கூறினார். விழாவில் ஜமுனா, சித்ரா,புஷ்பா, தீனா உள்பட பலர் பங்கேற்றனர்.

### குமாரபாளையத்தில்

# சைக்கிளில் சென்ற முதியவர் நிலை தடுமாறி விழுந்து பலி!

குமாரபாளையம், அக், 23–

குமாரபாளையத்தில் சைக்கிளில் சென்ற முதியவர் நிலைதடுமாறி விழுந்து பலியானார். குமாரபாளையம் தெற்கு காலனி பகுதியில் வசிப்பவர் சுப்பிரமணியம் (78) , தனியார் நிறுவன வாட்ச்மேன். இவர்மாலை 03:30 மணியளவில், பள்ளிபாளையம் சாலையில் சைக்கிளில் வேலையாக சென்று கொண்டிருந்தார். அப்போது, ரத்த அழுத்தம் காரணமாக நிலை தடுமாறி கீழே விழுந்தார். இவரை ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தனர்.

இவர் சிகிச்சை பலனின்றி, அதிகாலை 03:15 மணியளவில் இறந்தார். இது குறித்து குமாரபாளையம் போலீசார் விசாரணை செய்து வருகிறார்கள்.

# குமாரபாளையம் கோவில்களில் சிறப்பு வழிபாடு!

குமாரபாளையம், அக், 23

தீபாவளி நாளையொட்டி குமாரபாளையம் கோயில்களில் சிறப்பு வழிபாடு நடந்தது. தீபாவளி நாளையொட்டி குமாரபாளையம் அனைத்து சமூக காளியம்மன் கோயிலில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனை நடந்தது. இதே போல் கோட்டைமேடு காளியம்மன் கோயில், சேலம் சாலை, ராஜா வீதி சவுண்டம்மன் கோயில்கள், அம்மன்நகர் எல்லை கோயில், அங்காளம்மன் கோயில்கள், மாரியம்மன் கோயில்கள், திருவள்ளுவர் நகர் மங்களாம்பிகை கோயில், வாசுகி நகர் சக்தி மாரியம்மன் கோயில், நேதாஜி நகர் சந்தோசிஅம்மன்கோயில், தேவாங்கர் மாரியம்மன் கோயில், 24 மனை மாரியம்மன் கோயில், பெரிய மாரியம்மன் கோயில், அக்ரஹாரம் காசி விஸ்வேஸ்வரர் கோயில், பட்டத்தரசியம்மன் கோயில், தட்டான் குட்டை ஜெய்ஹிந்த் நகர் புருஷோத்தம பெருமாள் கோயில், கள்ளிப்பாளையம் மாரியம்மன், காளியம்மன் கோயில், பண்ணாரி மற்றும் சமயபுரம் மாரியம்மன் கோயில்களில் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடத்தப்பட்டன.

பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.

# திருப்பூரில் அரசு மருத்துவரை தாக்கிய 3 பேர் கைது!

திருப்பூர்,அக்.22–

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று பணியில் இருந்த மருத்துவர் கார்த்திக் முருகன் என்பவர் நோயாளிகளை பார்த்து வந்தார் அப்போது கோவில் வழி பகுதியைச் சேர்ந்த தீபக், கார்த்தி என்ற இருவரும் சாலை விபத்தில் காயம் அடைந்து மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர் அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் எக்ஸ்ரே எடுக்க காத்திருக்குமாறு மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார் இதனை ஏற்காத அவர்களின் நண்பர்கள் மூன்று பேர் சேர்ந்து மருத்துவரை தாக்கியுள்ளனர் இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. மருத்துவமனை பணியில் இருந்த ஊழியர்கள் உடனடியாக அவர்களைப் பிடித்து தெற்கு காவல் நிலைய போலீசாரிடம் ஒப்படைத்தனர். இதில் மூன்று பேரை கைது செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குமாரபாளையம் முதியோர் இல்லத்தில் தீபாவளி கொண்டாட்டம்!

குமாரபாளையம், அக், 23

குமாரபாளையம் முதியோர் இல்லத்தில் தீபாவளி கொண்டாட்டம் நடந்தது.குமார பாளையம் ஸ்ரீ குருகுலம் பொது நல அமைப்பின் சார்பில், கண்பார்வையற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல மறுவாழ்வு மையத்தில் தீபாவளி விழா நடைபெற்றது. இந்த மையத்தில் தங்கியுள்ள பெரியோர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், பட்டாசு,

இனிப்புகள் வழங்கப்பட்டன.

தலைவர் தனசேகரன், துணை தலைவர் முருகேசன், செயலர் ரவிக்குமார், பொருளாளர் ராஜேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.



மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரை நெகமம் கிராமம் பகுதியில் உள்ள தரைப்பாலம் வடகிழக்கு பருவமழை வெள்ளத்தால் பாதிப்படைந்ததை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் திரு.சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மாவட்டம், கார்டர் பாலத்தில் மழைநீர் வெளியேற்று நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் , ஆய்வு செய்து கார்டர் பாலம் சுரங்கப்பாதையின் கீழ் மழை நீர் விரைவாக வெளியேற்றப்பட்டுள்ளதை பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் உடன் உள்ளார்.



விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், பிளவக்கல் பெரியாறு அணையில் வடகிழக்கு பருவமழைதொடர்ந்துபெய்துவருவதால்,விருதுநகர்மாவட்டஆட்சித்தலைவர்மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து அணையின் தற்போதைய நீர் இருப்பு மற்றும் நீர் வரத்து குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராஜேந்திரன், சிவகாசி சார் ஆட்சியர் திரு.முகமது இர்பான், ஆகியோர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிம்ரன்ஜீத் சிங் காலோன், மண்டபம் பல்நோக்கு புயல் காப்பகத்தில் பொதுமக்களை சந்தித்து அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

### வேடசந்தூர் அருகே

# பன்றி பண்ணையில் புகுந்த 2 பேர் வாலிபரை சுற்றி வளைத்து சரமாரியாக கத்தியால் குத்திவிட்டு தப்பி ஓட்டம்!

வேடசந்தூர், அக்.23

வேடசந்தூர் அருகே பன்றி பண்ணையில் புகுந்த 2 பேர் வாலிபரை சுற்றி வளைத்து சரமாரியாக கத்தியால் குத்திவிட்டுதப்பிஓடினார்கள். வாலிபர் படுகாயம் அடைந்து தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஐய்யப்பா நகரை சேர்ந்தவர் ஜீவா(29) இவர் பன்றி வளர்ப்பது மற்றும் கறிக்கடை போடும் தொழில் செய்து வருகிறார். இவருக்கும் தாடிக்கொம்பை சேர்ந்த ஒருவருக்கும் மாரம்பாடியில் கறிக்கடை அமைப்பதில் தொழில் போட்டி இருந்து வந்துள்ளது. இந்நிலையில் நேற்று மாலை ஆத்திரமடைந்த இருவரும் சேர்ந்து வேடசந்தூர் அருகே உள்ள நாகம்பட்டிக்கு வந்து பன்றி பண்ணையில் இருந்த ஜீவாவை சுற்றிவளைத்து சரா மரியாக கத்தியால் குத்தியும் அரிவாளார் வெட்டிவிட்டு அங்கிருந்து 2 பேரும் தப்பி ஓடிவிட்டனர். இதில் உடல் முழுவதும் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய ஜீவாவை மீட்ட உறவினர்கள்வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். தகவல் அறிந்ததும் நேற்று இரவு வேடசந்தூரில் ஆத்துமேட்டை சேர்ந்த ஜீவாவின் உறவினர்கள் ஏராளமானோர் வேடசந்தூர் அரசு மருத்துவமனை முன்பு கூடியதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. வேடசந்தூர் போலீசார் மேலும் அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல்தடுப்பதற்காகபோலீசார் குவிக்க ப்பட்டனர்.



இதுகுறித்து வேடசந்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# திருப்பத்தூரில் காவலர் வீர வணக்க நாள்; கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மலர் வளையம் வைத்து அஞ்சலி!

திருப்பத்தூர் அக்.23

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவலர் வீரவணக்க நாள் முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டம் பாச்சல் ஆயுதப்படை மைதானத்தில் நினைவு சின்னம் அமைக்கப்பட்டுமாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராசு தலைமையில் காவலர் வீர வணக்க நாள் அனுசரிக்கப்பட்டது.

1959ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதியன்று லடாக் பகுதியில் "ஹாட்ஸ்பிரிங். என்ற இடத்தில் சீன ராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் மத்திய பாதுகாப்பு படை காவலர்கள் 10 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து இந்தியா முழுவதும் பல்வேறு சம்பவங்களில், பணியின்போது வீர மரணமடைந்த காவலர் களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21ஆம் நாள் காவலர் வீரவணக்க நாளாக நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி திருப்பத்தூர் மாவட்டம் பாச்சல் ஆயுதப்படை மைதானத்தில் காவலர் நினைவுச் சின்னம் அமைத்து "காவலர் வீர வணக்க நாள்.கூடுதல் காவல் கண்காணிப் பாளர் கோவிந்தராசு தலைமையில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்நிகழ்வில் துணை கண்காணிப் பாளர்கள், உட்பட காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் தங்கள் சீருடைகளில் கருப்பு ரிப்பன் அணிந்து மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர் . இந்த நிகழ்ச்சியின் போது உரையாற்றிய மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கடந்த ஆண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியின் போது உயிர் நீத்த காவல்துறையினரின் பெயர்களை நினைவு கூர்ந்தார்.

பின்னர் 63 துப்பாக்கி குண்டுகள் முழங்க வீர மரணம் அடைந்த காவல்துறையினருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

ராஜபாளையம் அருகே

# ஓடை கரை உடைந்து விவசாய நிலத்தில் வெள்ளம் புகுந்து சேதம்!

ராஜபாளையம் அக் 23

ராஜபாளையம் அருகே கணபதி சுந்தர நாச்சியாபுரம் பகுதியில் வெள்ளப் பெருக்கு காரணமாக ஓடை கரை உடைந்து விவசாய நிலத்துக்குள் புகுந்ததால் அங்கு பயிரிடப்பட்



டிருந்த வெங்காயம் வாழை மரங்கள் சேதம் மேலும் மின் கம்பம் சாய்ந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தால் அந்தப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது இது குறித்து வருவாய்த் துறையினர் பொதுப்பணித் துறை மின்வாரியம் ஆகிய வற்றுக்கு பலமுறை தகவல் அனுப்பியும் பாராமுகமாக இருப்பது மக்களை அவதிக்குள் ஆக்கியுள்ளது இது குறித்து அந்தப் பகுதி விவசாயிகள் கூறும்போது மூன்று நாட்கள் ஆகிறது பலமுறை தகவல் அளித்தும் யாரும் வந்து யாரும் வந்து பார்த்து நடவடிக்கை எடுக்காது மௌனம் காப்பது மிகவும் வேதனை அளிக்கிறது என்றனர்.



தூத்துக்குடியில் மழைநீர்தேங்கிய பல்வேறு பகுதியில்

# இரவு பகல் இரு நேரங்களில் அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு!

தூத்துக்குடி,அக்.23

தூத்துக்குடி வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் அதிகன மழையும் மிதமான மழையும் தொடா்ந்து பெய்து வருவதால் பல்வேறு பகுதிகளில் காற்றாட்டு வெள்ளமும் மழைநீர் ஓட்டமும் வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வடிகால்கள் மூலம் நீரோட்டம் செல்வதையும் தேங்கியுள்ள பகுதிகளில் அப்புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கனமழையால் தேங்கியிருந்த பகுதியான விஎம்எஸ்நகா், திரேஸ்புரம், பாக்கியநாதன்விளை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் இரவு பகல் இரு நேரங்களில்நேரில்சென்று பார்வையிட்டார். மேலும் தேங்கிய வெள்ள நீரை உடனடியாக வெளியேற்ற மின்மோட்டார்கள் ஏற்பாடு செய்ததுடன், ஜேசிபி இயந்திரத்தை வரவழைத்து மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார்.

உடன் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தா், மண்டலதலைவர் நிா்மல்ராஜ், கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் சங்கரன், முன்னாள் அறங்காவலர்குழு தலைவர் செந்தில்குமாா், வட்டப் பிரதிநிதி பாஸ்கா், மற்றும மணி அல்பட், உள்பட பலர் ஆய்வின் போது உடன் சென்றனா்.



போச்சம்பள்ளி அடுத்த சிப்காட் அருகே

# 5 கிராம மக்கள் பயன்படுத்தி வந்த பாதையை மூடப்பட்டதால் பாதை இன்றி கிராம மக்கள் அவதி!

கிருஷ்ணகிரி, அக்.23

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த பாளேத்தோட்டம் ஊராட்சி சிப்காட் பகுதியில் மூங்கம்பட்டி, காட்டு முக்கம்பட்டி, காட்டு முக்கம்பட்டி அருந்ததியர் நகர், அம்பேத்கர் நகர், குஞ்சால் கவுண்டர் கொட்டாய் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தில் சுமார் 300 க்கும் மேற்ப்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராம மக்கள் சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக கிராம மக்கள் மண் சாலையை பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்த கிராம மக்களின் முக்கிய பிரதான சாலையான இந்த சாலையை கடந்த 5 நாட்களுக்கு முன்னர் அதே பகுதியை சேர்ந்த நபர்கள் மண் கொட்டி சாலையை துண்டித்ததாக தெரிகிறது. இதில் கிராம மக்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் செய்த இந்த செயலால் கிராம மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். மேலும் பள்ளி கல்லூரி மாணவர்கள் சிப்காட் கம்பெனிகளுக்கு செல்லும் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணிகளுக்கு செல்ல முடியாத சூழலுக்கு கிராம மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே இந்தசாலையை மீட்டு தரவேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவகாசி அருகே

# கனமழையில் வீடு இடிந்து விழுந்ததில் 17வயது நர்சிங் மாணவி சாவு!

சிவகாசி,அக்.23

சிவகாசி அருகே கனமழையில் வீடு இடிந்து விழுந்ததில் 17வயது நர்சிங் மாணவி உயிரிழந்தார்.



இது குறித்து திருத்தங்கல் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே திருத்தங்கல் பழைய வெள்ளையாபுரம் சாலையை சேர்ந்தவர் வீரமணிராதா தம்பதியின் மகள் பவானி(17) தனியார் நர்சிங் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வந்தார்.

கடந்த சில நாட்களாக அப்பகுதியில் பெய்த தொடர்மழை பெய்து வருகிறது. இந்நிலையில் பாவனி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, இரவு பெய்த கனமழையில் அவர் மீது வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கி காயமடைந்த பவானியை உறவினர்கள் மீட்டு, விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அதன் பின் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பவானி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது குறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

உலக சாதனை படைத்த மாணவிக்கு

# லதா மாதவன் கல்வி நிறுவனம் சார்பில் பாராட்டு விழா!

மேலூர் அக்.23

மதுரை மாவட்டம் அழகர் கோவில் லதா மாதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு வணிகவியல் பயிலும் மாணவி ஆர். ஜமுனா தேவி தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற 3 கி.மீ நடைபயிற்சி சிலம்பம் மராத்தான் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெற்று உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் பெற்றார். இந்த மாணவியை சேர்மன் டத்தோ டாக்டர் மாதவன் மற்றும் செயல் இயக்குனர் தினேஷ் மாதவன் , இணை செயலாளர்



ஜெகன் மாதவன், கல்வி ஒருங்கிணைப்பாளர் பால் நிக்சன் ,செயல் அலுவலர்கள் முத்துமணி காந்திநாதன் மீனாட்சி சுந்தரம் பிரபாகரன் கலைக் கல்லூரி முதல்வர் முருகன் மற்றும் முதல்வர்கள் சுடலைமணி தவமணி பழனி செல்வம் , துணை முதல்வர் ரமேஷ் துறை தலைவர் மணிமேகலை பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் வாழ்த்தி பாராட்டினார்கள்.

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை சார்பில்

# காவலர் வீரவணக்க நாளில் உயிர்த் தியாகம் செய்த காவலர்களுக்கு மரியாதை!

கள்ளக்குறிச்சி,அக்.23

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை சார்பில் காவலர் வீரவணக்க நாளில் உயிர்த் தியாகம் செய்த காவலர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. நாட்டைப் பாதுகாப்பதற்காக, வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த காவலர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21ம் தேதி காவலர் வீரவணக்க நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. மாவட்ட காவல் அலுவலகத்தில் காவலர் வீரவணக்க நாளில் காவலர்களின் உயிர் தியாகத்தை போற்றும் வகையில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை சார்பில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.S மாதவன், அவர்கள் தலைமையில் கருப்பு பட்டை அணிந்து, அரசு மரியாதையுடன் 63 துப்பாக்கி குண்



டுகள் முழங்க மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், திரு.சரவணன், திரு. திருமால், துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



உளுந்தூர்பேட்டை அருகே உள்ள திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கெடிலம் ஆசிரியர் நகர் பகுதியில் மழை நீர் வெளியேற வழி இல்லாததால் தெருக்களில் மழை நீர் அதிக அளவில் தேங்கியுள்ளது இதனால் அப்பகுதி மக்கள் கடுமையாக அவதிப்பட்டு வருகின்றனர் இது குறித்து வட்டார வளர்ச்சி அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடத்துக்குளத்தில்

# தனியார் காற்றாலை குழுமம் சார்பில் ஆதரவற்றோர்க்கு தீபாவளி புத்தாடைகள்!



மடத்துக்குளம் அக் 23

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் ஐ பாக்ஸ் தனியார் காற்றாலை குழுமம் சார்பில் ஆறாம் ஆண்டாக சாலையோர ஆதரவற்றோர்க்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடைகள் இனிப்புகள் வழங்கபட்டது. சமூக ஆர்வலரும் ஐபாக்ஸ் நிறுவன சி.இ.ஒ வுமான காற்றாலை குருசாமி அவர்கள் சார்பாக ஐபாக்ஸ் குழுமத்தின் மேலாளர்கள் கண்ணன் ,பாலசந்தர ஆகியோர் சாலை ஒர ஆதரவற்றோர்க்கு புத்தாடை களை வழங்கினர்அனைவரும் மகிழ்ச்சியுடன் புத்தாடை அனிந்து பட்டாசுகள் வெடித்து கொ ண்டாடிகளிக்கும்தீ பாவளி திருநாளில்ஆ தரவற்றோம் அத்தகய மகிழ்ச்சியை பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில்மடத்துக்குளம் பேருந்துநிலைய பகுதிகள் சாலை ஓரங்களில் வசிப்பவர்களை அழைத்து அவர்களுக்கு புத்தாடைகள் வழங்கபட்டது புத்தாடைகளை மகிழ்ச்சியுடன் அ வர்கள் பெற்றுசென்றனர்.

# தெருக்களில் ரோடு சேதம்!

சிவகாசி அக்.23

சிவகாசி அருகே வெள்ளூர் ஊராட்சி அம்மன் கோயில் பட்டியில் தெருக்களில் ரோடு சேதுமடைந்திருப்பதால் குடியிருப்போர் அவதிப்படுகின்றனர் சிவகாசி அருகே வெள்ளூர்ஊராட்சி அம்மன் கோயில் பட்டியில் ஐந்துக்கு மேற்பட்ட தெருக்கள் உள்ளன.

இவற்றில் மூன்று தெருக்களில் ரோடு அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது இந்நிலையில் தற்போது ரோடு முற்றிலும் சேதமடைந்து குண்டம் குழியுமாக மாறிவிட்டது இதில் டூவீலர்கள் சென்றுவர முடியவில்லை மழைக்காலங்களில் தண்ணீர் தெருவில் தேங்குவதால் குடியிருப்பு வாசிகள் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை.

இந்த தெருக்களில் ரூபாய் பத்து லட்சத்தில் வாறுகால் அமைக்கும் பணி முடிந்து உள்ளது ஆனால் ரோடு சீரமைக்கப்படவில்லை எனவே உடனடியாக சேதம் அடைந்த ரோட்டையும் சீரமைக்க வேண்டும்.

# தீபாவளி பண்டிகை முன்னிட்டு கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்!

கொடைக்கானல்,அக்.23

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கன மழை முதல் மிதமான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது லேசான மழையும் கனமழையும்பெய்து வருகிறது .தொடர்ந்து இன்று காலை முதல் லேசானசாரல் மழையும் கனமழை பெய்து வருகிறது எதிரேவரும் வாகனங்கள்தெரியாத அளவிற்கு மேக மூட்டம் நிலவி வருகிறது சுற்றுலா பயணியின் வாகனங்களில் முகப்பு விளக்குகளுடன் செல்கின்றனர் சுற்றுலா பயணிகள் காண முடியாத அளவிற்கு சுற்றுலா தளங்களில் மேகக் கூட்டங்கள் சூழ்ந்துள்ளது சுற்றுலா தலங்களை பார்க்க முடியவில்லை என்று வருத்தமின்றி சுற்றுலா பயணிகள் நடனமாடியும் புகைப்படம் எடுத்தும் தீபாவளி சிறப்பாக கொண்டாடி வருகிறார்கள்



தீபாவளி பண்டிகை முன்னிட்டு கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்.



# விழுப்புரம் மாவட்டம் வானூர் பகுதியில் 184 மில்லி மீட்டர் மழைப்பொழிவு!

## பேரிடர் மேலாண்மை அவசரகால கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சியர் ஆய்வு!!

விழுப்புரம்,அக்.23

விழுப்புரம் உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு இன்று கனமழையின் காரணமாக ரெட் டாலர் விடப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று இரவு முதல் விடிய விடிய விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கனத்த மழை பொழிந்தது. விழுப்புரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக வானூர் பகுதியில் 184 மில்லி மீட்டர் மழையும், வல்லம் பகுதியில் 170 மில்லி மீட்டர் மழையும், விழுப்புரம் மற்றும் அதன் சுற்றுவளப் பகுதியில் 168 மில்லி மீட்டர் மழையும், செஞ்சி பகுதியில் 123 மில்லி மீட்டர் மழையும், கெடார் பகுதியில் 115 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் 103 மில்லி மீட்டர் மழையும் முகையூர் பகுதியில் 93 மில்லி மீட்டர் மழையும் மரக்காணம் பகுதியில் 94 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது இதற்கிடையே விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை அவசர கால கட்டுப்பாட்டு அறையினை இன்று மாவட்ட ஆட்சியர் அப்துல் ரகுமான் நேரில் சென்று பார்வையிட்டார். விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்பெரும்பாக்கம் தரை பாலத்தில் மழை நீர் தேங்காமல் இருக்க நேரில் சென்று பார்வையிட்டு அவர் நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார். மேலும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## வடகிழக்குப் பருவமழை தீவிரம் :

# தடுப்பணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு; சாலைகளில் மழைநீர் தேங்கியதால் கோவையில் வாகன ஓட்டிகள் அவதி!



கோவை,அக்.23

கோவையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து இருப்பதால் தடுப்பணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது மேலும் சாலைகளில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்தனர்.

கோவையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் சிறுவாணி அணை பில்லூர் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது மேலும் குளங்கள் தடுப்பணைகள் நீர்வரத்து அதிகரித்து உள்ளது கோவை ஆத்துப்பாலம் சுண்ணாம்பு கால்வாய் தடுப்பணையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது இதனால் தடுப்பணை திறக்கப்பட்டுள்ளது வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நிலையில் ஆபத்தை உணராமல் இளைஞர்கள் குளிப்பதும் மீன்பிடிப்பதும் ஆக உள்ளனர் அங்கு காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட கோரிக்கை எழுந்துள்ளது மழையால் நொய்யல் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது இதனால் சித்திரைச்சாவடி தடுப்பணை நண்டங்களை தடுப்பணை ஆகிய அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது கோவையில் நேரு விளையாட்டு அரங்கில் அருகே மழை நீர் தேங்கி நின்றது இதனால் வாகனங்களில் சென்றவர்கள் பாதி அடைந்தனர் இது போன்று உக்கடம் பைபாஸ் சாலை திருச்சி சாலை உட்பட பல பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது மழை குறித்து கோவையில் உள்ள வானிலை ஆய்வாளர்கள் கூறும்போது

இலங்கை அருகே நீடித்து வரும் காற்றழுத்து தாழ்வு நிலை மன்னர் வளைகுடா வழியாக வடமேற்கு திசை நோக்கி நகரம் என்பதால் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கிழக்கு சரிவுகளில் மிக கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது கோவை நீலகிரி மாவட்டங்களில் மிக கனமழை வாய்ப்புள்ளது நாளை வியாழக்கிழமை முதல் கொங்கு மண்டலத்தில் மழையின் அளவு படிப்படியாக குறையும் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை முதல் மாத இறுதிவரை மழையின் அளவு குறைவாக இருக்கும் என்றும் கூறினர்.



# திருப்பத்தூர் நகரப் பகுதியில் காலை உணவு திட்டம் ஆய்வு மேற்கொண்ட திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்!

திருப்பத்தூர்.அக்.23

திருப்பத்தூர் நகராட்சி பகுதிக்கு சேர்ந்த ஒன்றாவது முதல் ஐந்தாவது வாய்ப்பு வரை பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் திடீரென திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி ஆய்வு மேற்கொண்டார்

பின்பு உணவு சரியான முறையில் செய்கிறார்களா என சாப்பிட்டு பார்த்தால் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி பள்ளி மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் உணவு சென்றடைய வேண்டும் தரமான உணவு சென்றடைய வேண்டும் தீபாவளி விடுமுறை முடிந்து பள்ளிகள் இன்று திறக்கப்பட்டது. திருப்பத்தூர் நகராட்சியில் உள்ள அரசு பள்ளிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். அவர்களுக்கு அரசு சார்பில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்படும் உணவு, திருப்பத்தூர் பகுதியில் உள்ள சமையல் கூடத்தில் தயார் செய்யப்படுகிறது. இந்த நிலையில், அந்த உணவு தரமான முறையில் தயார் செய்யப்படுகிறதா என்று நல்லதம்பி எம்.எல்.ஏ. திடீரென ஆய்வு செய்தார். அப்போது, தரமான முறையில் உணவை தயாரித்து சரியான நேரத்தில் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். ஆய்வின்போது திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் சாந்தி, பொதுக்குழு உறுப்பினர் உள்பட பலர் உடன் இருந்தனர்.

## கோவையில்

# துணிக்கடையில் தீ விபத்து!

## உயிர்சேதம் தவிர்ப்பு!!

கோவை,அக்.23–

கோவை ஒப்பணக்கார வீதியில் உள்ள துணிக் கடையில் இன்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

கோவை, ஒப்பணக்கார வீதியில் பாபு என்பவருக்கு சொந்தமான ஸ்ரீ லட்சுமி சில்க்ஸ் என்ற துணிக் கடை செயல்பட்டு வருகிறது.

இந்த துணிக் கடையில் இன்று அதிகாலை 4.30 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டு உள்ளது. கடையின் இரண்டாவது மாடியில் இருந்து புகை வெளியேறிய நிலையில், அப்பகுதியில் இருந்த பாதுகாவலர்கள் உடனடியாக கடை உரிமையாளருக்கும் தீயணைப்பு துறையினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இரண்டாவது மாடியில் தீ பற்றி இருக்கும் நிலையில் கிரேன் உதவியுடன் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு துறையினர் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தீ விபத்து குறித்து தகவல் அறிந்த கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் , மாவட்ட தீயணைப்பு அலுவலர் புளுகாண்டி உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியை துரிதப்படுத்தினர். 4 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தபட்டது.அதிகாலை நேரத்தில் நடந்த தீ விபத்து காரணமாக ஒப்பணக்கார வீதியில் பரபரப்பான சூழல் நிலவியது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போராடி தீ கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக புகை வந்து கொண்டு இருப்பதால் அதை கட்டுப்படுத்துவதற்கான பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டனர். தீ விபத்து காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு தீயை அணைக்கும் நடைபெற்றது.

அதிகாலை நேரத்தில் தீ விபத்து ஏற்பட்டதால் யாரும் அங்கு இல்லாததால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. காரணம் என்ன என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தேனி மாவட்டம் வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்ட நீர் மதுரை வந்தடைந்த நிலையில் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. ஆற்றின் இரு கறைகளையும் தொட்டுச் செல்வந்தால், ஆற்றில் இறங்கி குளிக்கவோ துணி துவைக்கவோ அனுமதி இல்லை என ஒலிபெருக்கி மூலம் காவல்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

# காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை துறை மாநில ஒருங்கிணைப்பாளர் நியமனம்!



சென்னை,அக்.23

காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை துறை தமிழ்நாடு மாநில ஒருங்கிணை ப்பாளராக சிராஜ் நியமனம் செய்யப்பாட்டார். இதனை அடுத்து அவர் மூத்த காங்கிரஸ் கட்சி தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு

என்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை மாநில ஒருகிங்கிணைப்பாராக நியமனம் செய்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜூன் கார்கே, மூத்த தலைவர்கள் அன்னை சோனியா காந்தி, ராகுல் காந்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை மற்றும் ஒப்புதல் வழங்கிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறையின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் பிரதாப்கரி , மற்றும் பரிந்துரை செய்த அகில இந்திய சிறுபான்மை துறை பொறுப்பாளர் தமிழ்நாடு ஜானப் நஜிமுல் இஸ்லாம், மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை தலைவர் பாரத யாத்திரி ஜனாப் முஹம்மது ஆரிப் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை துறை மாநில ஒருங்கிணைப்பாளர் சிராஜ் தெரிவித்துள்ளார்.

# தேன்கனிக்கோட்டை அருகே விளைநிலங்களுக்குள் புகுந்து நாசம் செய்த காட்டு யானைகள்!



கெலமங்கலம்,அக்.23

கிருஷ்ணகிரிமாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே சந்தனப்பள்ளி ஊராட்சியில் உள்ள சாப்பாரணபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் லட்சுமனன் (வயது 55) இவர் தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் சுமார் 2 ஏக்கர் அளவில் பூகோஸ் பயிரிட்டிருந்தார் . இந்நிலையில் நேற்று இரவு விவசாயி நிலங்களில் புகுந்த 5 காட்டு யானைகள் சுமார் 2 ஏக்கர் பூகோஸ் மற்றும் பைப்புகளை மிதித்து அழித்து நாசம் செய்து உள்ளது.

இது குறித்து வனத்துறை தகவல் தெரிவிக்கப் பட்டது. ஆனால் யாரும் வந்து யானைகளை விரட்டவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

தொடர்ந்து, அவர்கள் இந்தப் பகுதியில் அடிக்கடி காட்டு யானைகளால் விவசாய பெருங்குடி மக்களுக்கும், விவசாய விளை பொருட்களை நாசம் செய்வதால் பலத்த நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே, வனத்துறை அதிகாரிகள் உடனடியாக தீவிர நடவடிக்கை மேற்கொண்டு விவசாய நிலங்களில் விலை பொருள்களை நாசம் செய்யும் காட்டு யானைகளை வன பகுதிக்கு விரட்ட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மசினகுடி சாலையில் உலா வந்த புலி!



நீலகிரி, அக்.23–

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வெளிமண்டல வனப்பகுதியில் அமைந்துள்ள மசினகுடி, மாயார், சிங்காரா மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் அண்மைக்காலமாக புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. குறிப்பாக வனப் பகுதியில் இருந்து வெளியேறக்கூடிய புலிகள் சாலை ஓரங்களில் உலா வருவதும் சாலையை கலந்து செல்வதும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் மசினகுடியில் இருந்து மாயார் செல்லக்கூடிய சாலையில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய புலி கம்பீரமாக சாலையை கடந்து சென்றது. இதனை அவ்வழியாக வாகனத்தில் சென்ற சுற்றுலாப் பயணிகள் வாகனத்தில் இருந்தவாறு கண்டு ரசித்தும், வீடியோ பதிவு செய்தும் மகிழ்ந்தனர்.



# விக்கிரவாண்டி சுங்க சாவடியில் போக்குவரத்து நெரிசல்!

விக்கிரவாண்டி,அக்.23

தீபாவளி பண்டிகையொட்டி இன்று வரை தொடர் விடுமுறை அளிக்கப்பட்டது. இதனால் சென்னையிலிருந்து திருச்சி, மதுரை, தேனி, திண்டுக்கல், சேலம், கோவை, உள்ளிட்ட தென் தமிழகத்திற்கு தீபாவளி பண்டிகைக்காக சென்ற பொதுமக்கள் இன்று மீண்டும் சென்னையை நோக்கி படையெடுத்து வருகின்றனர். இதன் காரணமாக விழுப்புரம் அடுத்த விக்கிரவாண்டி சுங்கச் சாவடியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனை விழுப்புரம் மாவட்ட காவல் துறையினர் வாகனங்களில் செல்வோருக்கு ஏதுவாக சுங்க சாவடி அருகே பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வாகனங்களை முறையாக செல்வதற்கு ஏற்பாடு செய்து வருகின்றனர்.

# கோவையில் அரசு பேருந்து பயணிகள் மீது மோதி விபத்து 19 வயது இளம் பெண் உயிரிழப்பு - 3 பேர் படுகாயம்!



கோவை,அக்.23

கோவை, காந்திபுரம் பகுதியில் உள்ள நகரப் பேருந்து நிலையத்தில் இன்று இரவு வாளையாருக்கு செல்வதற்காக 96 என்ற எண் கொண்டு தாழ்தள சிறப்பு சொகுசு பேருந்து கிளம்பியது, அப்பொழுது திடீரென ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து அதன் அருகில் நின்று இருந்த மற்ற மினி பேருந்து உட்பட நான்கு பேருந்துகள் மற்றும் பேருந்துக்காக காத்து இருந்த பயணிகள் மீது மோதியதில் சம்பவ இடத்திலே கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தைச் சேர்ந்த ஹரிணி என்ற பெண் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் அங்கு நின்று இருந்தால் மதுக்கரை பகுதியைச் சேர்ந்த வின்சி, சத்யா மற்றும் அடையாளம் தெரியாத 55 வயது நபர் உட்பட மூன்று பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயமடைந்த அவர்களை அங்கு இருந்தவர்கள் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். கோவை காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிய அரசு பேருந்து பயணிகள் மற்றும் பேருந்துகள் மீது மோதிய விபத்தில் 19 வயது இளம் பெண் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



திருச்செங்கோடு நகராட்சியில் தீபாவளி பண்டிகையின்போது வெடித்த பட்டாசுகள் வீதிகள்தோறும் குவிந்து காணப்பட்டன. அந்த கழிவுகளை அகற்றும் பணியில் நகராட்சி தூய்மை பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.